RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2431

OPEN ACCESS

# பக்தி இலக்கிய மரபில் காரைக்காலம்மையாரும் ஆண்டாளும்

ச. சிலம்புச் செல்வி [அ, *]

[அ] தமிழ்த்துறை, அறிஞர் அண்ணா கலைக்கல்லூரி, விழுப்புரம், தமிழ்நாடு, இந்தியா.

# Karaikalammaiyar and Andal in Devotional Literature

S. Silambu Selvi [a, *]

[a] G Department of Tamil, Arignar Anna Government Arts College, Viluppuram, Tamil Nadu, India

* Corresponding Author: silambu@gmail.com

Received: 13-02-2024
Revised: 27-06-2024
Accepted: 03-07-2024
Published: 16-07-2024

## ABSTRACT

Tamil language has a special place in the history of devotional literature. Saiva Nayanmars and Vaishnava Alwars have created Tamil as the 'language of devotion' due to its wealth which they created by combining scriptures. It is no exaggeration to say that devotional literature is the greatest asset of Tamil society. Karaikalammaiyar, one of the sixty-three Nayanmars, was the originator of Saivite devotional literature. She is the one who gained freedom of soul and salvation and brought pride to the female race. Similarly, Andal was one of the Vaishnava Alwars who lived in the tenth century. She is the only woman among the twelve Alwars celebrated in Vaishnava literature. It is said that life is useless in love, and if you want to reach God, you have to give up love. But the piety of Andal is different from the piety of other Alwars. Andal's hymns gave world a new devotion to womanhood. This review article has been written to highlight the innovation of the devotional tradition of Karaikalammaiyar and Andal in the history of Devotional literature.

**Keywords:** Sangam Literature, Karaikalammaiyar, Andal, Tamil society

## முன்னுரை

பக்தி இலக்கிய வரலாற்றில் தமிழ் மொழிக்கென தனித்த இடமுண்டு எனலாம். சைவ நாயன்மார்களும் வைணவ ஆழ்வார்களும் இறைபக்தியையும் தமிழையும் இணைத்துப் படைத்தளித்த இலக்கிய வளத்தினால் தமிழைப் ‘பக்தியின் மொழி’ எனக் கூறுவர். தமிழ்ச் சமூகத்தின் பெரும் சொத்து பக்தி இலக்கியங்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. சைவ பக்தி இலக்கியத்தின் தொடக்கத்திற்கு வித்திட்டவர் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரான காரைக்காலம்மையார். ஆன்ம சுதந்திரத்தை, ஆன்ம முக்தியைப் பெற்று பெண் இனத்துக்குப் பெருமை சேர்த்தவர் இவர். அதேபோல பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த வைணவ ஆழ்வார்களுள் ஒருவர் ஆண்டாள். வைணவ இலக்கியங்கள் போற்றும் பன்னிரண்டு ஆழ்வார்களுள் இவர் ஒருவரே பெண் ஆவார். கடவுள் நெறி கொள்ளின் காதல் நெறியில் உயிர்கள் செல்லாது என்றும், கடவுளை அடைய வேண்டுமெனில் காதலை அறவே கைவிட வேண்டும் என்றும் கூறுவர். ஆனால் ஆண்டாளின் பக்தியுணர்வு பிற ஆழ்வார்களின் பக்தி நெறியிலிருந்து வேறுபட்டது. பெண்மைக்கென புதியதொரு பக்தி நெறியை ஆண்டாளின் பாசுரங்கள் உலகிற்கு அளித்தன.

இவ்வாய்வுக் கட்டுரை, பக்தி இலக்கிய வரலாற்றில் காரைக்காலம்மையார் மற்றும் ஆண்டாளின் பக்தி மரபு எத்தகைய புதுமையைப் பெற்றிருந்தது என்பதை எடுத்துரைக்கும் வகையில் எழுதப்பட்டுள்ளது.

## பக்தி இலக்கிய மரபு

சங்க இலக்கியங்களில் கடவுள்கள் குறித்த பதிவுகள் ஆங்காங்கே காணப்படுகின்றன. இயற்கையோடு இணைந்த சங்க கால மக்களின் வாழ்க்கையில் மரங்களும் நீர்நிலைகளும் மலைகளும், சூர், அணங்கு, முருகு முதலானவை கடவுள் வழிபாடாக இருந்தது. தமிழின் தொன்மையான இலக்கண நூலான தொல்காப்பியத்தில் ஐவகை நிலங்களுக்குரிய கடவுள்களாக திருமால், முருகன், இந்திரன், வருணன், கொற்றவை ஆகிய கடவுள்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இதனை,

மாயோன் மேய காடுறை உலகமும் / சேயோன் மேய மைவரை உலகமும் / வேந்தன் மேய தீம்புனல் உலகமும் / வருணன் மேய பெருமணல் உலகமும் / முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச் / சொல்லிய முறையான் சொல்லவும் படுமே'[1] (தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல் நூற்பா 5)

என்னும் தொல்காப்பிய நூற்பாவின் வழி அறியமுடிகின்றது.

அதுமட்டுமின்றி, தாழ்சடை பொலிந்த அருந்தவத்தோன், முக்கட்செல்வன், கறைமிடற்று அண்ணல், நீலமணிமிடற்று அண்ணல், முழுமுதல்வன், ஈரஞ்சடை அந்தணன் எனச் சிவபெருமானைப் பற்றிய குறிப்புகளும் காணக்கிடைக்கின்றன.

## பல்லவர் காலம்: பக்தி இலக்கிய காலம்

சங்க இலக்கிய காலத்திற்குப் பிறகு தமிழகத்தில் களப்பிரர்கள் ஆட்சி செய்தனர். அந்தச் சமயத்தில் சமண பௌத்த சமயங்கள் மக்கள் மத்தியில் செல்வாக்கு செலுத்தின. களப்பிரர்கால இலக்கியங்களிலும் சமண பௌத்த சமயக் கருத்துகளே மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டன.

களப்பிரர் காலத்திற்குப் பிறகு சோழர்களுடைய ஆட்சிக்காலத்தில் அதாவது கி.பி. 7, 8. 9ஆம் நூற்றாண்டுகளில் சமண பௌத்த சமயச் சிந்தனைகளுக்கு மாற்றாக சைவ வைணவ சமயச் சிந்தனைகள் மக்களிடையே பரப்பப்பட்டன. இறைவனையும் இறையடியார்களையும் பக்தி இலக்கியங்கள் பேசின. கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம், கோபுர தரிசனம் கோடி புண்ணியம், திருநீறில்லாத நெற்றி பாழ் என்னும் எண்ணத்தை மக்கள் மத்தியில் ஆழமாக விதைத்தனர். இலக்கியங்களின் முதன்மையான பணி, மக்கள் மத்தியில் சைவம் மற்றும் வைணவ சமயத்தின் கொள்கைகளைப் பரப்பி, மக்களை நம்முடைய கடவுள் வழிபாட்டுச் சிந்தனைகளுக்கு அழைத்து வருவது என்பதாகக் கருதப்பட்டது.

## சைவ சமய இலக்கியங்கள்

சிவனை முழுமுதற்கடவுளாகக் கொண்டது சைவ சமயம். இந்தச் சைவ சமய கருத்துக்களைப் பேசிய இலக்கியங்கள் சைவ இலக்கியங்கள் எனப்படும். கி.பி.ஆம் நூற்றாண்டு முதல் 12 ஆம் நூற்றாண்டு வரை தமிழ் மொழியைச் சைவ சமயமே செல்வாக்கு செலுத்திய எனலாம்.

## வைணவ சமய இலக்கியங்கள்

திருமாலை முழுமுதற்கடவுளாகக் கொண்ட சமயம் வைணவ சமயம் ஆகும். திருமாலின் பக்திநெறியில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட ஆழ்வார்கள் பன்னிருவரால் பாடப்பெற்ற பக்திப் பாசுரங்கள்வழியாக வைணவ சமயக் *கருத்துகள் மக்கள் மத்தியில் விதைக்கப்பட்டன.*

"பக்தி இலக்கிய காலகட்டத்தில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் சமண பௌத்த மதங்களைக் கடுமையாக விமர்சனம் செய்ததற்குக் காரணம் வைதீகச் சமயத்தின் எழுச்சி என்றும்,

பிராமணியச் செயல்பாடு என்றும் கூறப்படுகிறது."[2] (எஸ். தோதாத்ரி, வைணவம் மார்க்சியப் பார்வை, ப.80)

## பக்தி இலக்கிய முன்னோடி: காரைக்காலம்மையார்

சைவ இலக்கிய முன்னோடிகளில் முதன்மையானவர் காரைக்காலம்மையார். இவரது இயற்பெயர் புனிதவதியார். சிறுவயது முதல் சிவபெருமான் மீது அளவுகடந்த பக்தி கொண்டவர். பாடல்கள் எழுதும் திறமையும் கொண்டவர். பரமதத்தன் என்னும் வணிகரைத் திருமணம் செய்துகொண்டு இல்லற வாழ்க்கையில் தனது கடமைகளைச் செவ்வனே செய்து வந்தார். ஒருநாள் தன் கணவர் கொடுத்தனுப்பிய மாங்கனியைச் சிவனடியார் ஒருவருக்கு உணவாகக் கொடுத்துவிட, தன் கணவர் மாங்கனியைக் கேட்டபோது இறைவனிடம் வேண்டி மாங்கனியைப் பெற்றுக் கொடுத்தார். இவரது தெய்வீக ஆற்றலை நேரில் கண்ட இவரது கணவர், புனிதவதியாரை விட்டு நீங்கினார். மேலும், வேறு ஊரில் வேறொரு பெண்ணைத் திருமணம் செய்துகொண்டு வாழத் தொடங்கினார். மேலும், புனிதவதியாரைத் தனது குலதெய்வமாக ஏற்றுக் கொண்டு பரமதத்தனும் அவனது மனைவி மற்றும் குழந்தைகளும் காலில் விழுந்து வணங்கினர். இதனால் குடும்ப வாழ்க்கை மிகப்பெரிய கேள்விக்குறி ஆகிவிடவே, இனி இந்தப் பெண்ணுருவில் வாழ்வதில் பயனில்லை என்று கருதி, இறைவனிடம் வேண்டிப் பேயுரு பெற்று சிவனுக்குத் தொண்டு செய்வதென இறைவாழ்க்கையை வாழத் தொடங்கினார். கயிலாயத்தில் உள்ள சிவனைக் காணத் தலையால் நடந்து சென்று இறைவனைக் கண்டார். இவரது இந்தச் செயலைக் கண்ட சிவபெருமான், வரும் இவள் நம் அம்மை காண் என்று கூறினார். இறைவன் உமக்கு என்ன வேண்டும் கேள் என்று கூறியதும், பிறவாமை வேண்டும், மீண்டும் பிறப்புண்டேல் உம்மை மறவாமை வேண்டும், திருவாலங்காட்டில் நீர் ஆடும் கோலத்தைக் கண்டு மகிழ வேண்டும் என இறைவனிடம் வேண்ட, சிவபெருமானும் அவ்வாறே அருள் செய்தார்.

திருவாலங்காட்டிற்குச் சம்மந்தர் வந்தபோது காரைக்காலம்மையார் தலையால் நடந்து சென்று இறைவனை அடைந்தார் என்பதால் அவர் பிறந்த தலத்தைக் காலால் மிதிக்க மறுத்தார். ஊருக்கு வெளியே பழையனூரில் திருஞானசம்பந்த தங்கினார்.

அறுபத்து மூன்று நாயன்மார்களுள் அமர்ந்த நிலையில் காணப்படும் நிலையே அம்மையாரின் சிறப்புக்குச் சான்று. ஒரு பொருளைப் பல பாடல்களில் பாடும் பதிக மரபை முதலில் தொடங்கி வைத்தவர் காரைக்காலம்மையார் தான். கட்டளைக் கலித்துறை என்ற புதுவகை யாப்பு வகையைப் பாடல்களில் கையாண்டவர். இவர் சிவபெருமானின் பெருமைகளைப் பற்றி இவர் எழுதிய பதிகங்கள் மூத்தத் திருப்பதிகம் எனச் சிறப்பித்துக் கூறப்படுகிறது.

திருவாலங்காட்டு மூத்தத் திருப்பதிகம், திருவிரட்டை மணிமாலை, அற்புதத் திருவந்தாதி முதலிய நூல்களை எழுதியுள்ளார்.

"இறைவனே எவ்வுயிருந் தோற்றுவிப்பான் தோற்றி / இறைவனே ஈண்டிறக்கம் செய்வான் இறைவனே / எந்தாயென இரங்கும் எங்கள் மேல் வெந்துயரம் / வந்தால் அது மாற்றுவான்"[3] (காரைக்கால்அம்மையார், அற்புதத் திருவந்தாதி, பாடல் எண் 5)

என, இறைவனை தாயாகவும், தந்தையாகவும் விளங்கும் திறத்தினைக் காரைக்காலம்மையார் எடுத்துரைக்கின்றார்.

சிவபெருமானைக் கடவுளாக மட்டுமின்றி, வாழ்வில் துன்பங்கள் அண்டாமல் குழந்தையைத் தாயும் தகப்பனும் காப்பது போல சிவபெருமானும் தன்னை வணங்கும் பக்தர்களைக் காத்தருள்வார் என முழுமையாக நம்பியவர் காரைக்காலம்மையார். அதனாலேயே தனது குடும்ப வாழ்க்கையில் பெருந்துயரம் வந்தபோதும் கலங்கி நிற்காமல் முழுமையான இறைநெறியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு பெருவாழ்வை எய்தினார்.

## ஆண்டாளின் பக்தி நெறி

இலக்கியச் செழுமைக்கும் தத்துவம், பக்தி ஆகியவற்றிற்கும் உதாரணமாகப் போற்றப்படுவது ஆண்டாளின் திருப்பாவையும், நாச்சியார் திருமொழியும் ஆகும். இவ்விரண்டு நூல்களையும் ஆண்டாள் தனது 15ஆம் வயதில் இயற்றியுள்ளார் என்பது ஆச்சரியமளிக்கிறது. ஆண்டாளின் பாசுரங்களைப் படித்தால் பெண்ணின் மன உணர்வுகளையும், தெய்வீகத் தன்மையினையும் ஒருசேர உணர முடியும்.

தமிழகத்தில் ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த பெண் ஆழ்வார் ஆண்டாள். ஸ்ரீவில்லிபுத்தூரில் பெரியாழ்வார் என்னும் பெருமை மிகுந்த ஆழ்வாரின் வளர்ப்புமகள் இவர். இவரது இயற்பெயர் குழற்கோதை. இளம் வயதிலிருந்தே கண்ணன் மீது அளவு கடந்த பக்தியும் காதலும் கொண்டிருந்தார் கோதை எனும் ஆண்டாள். அதனால் கண்ணனையே கணவனாக மனதால் வரித்துக் கொண்டார்.

கண்ணனைக் கணவனாக மனதுக்குள் வரித்துக் கொண்ட பின், பெருமாளுக்கு அணிவிக்கின்ற மாலையை முதலில் தான் அணிந்து அழகு பார்த்து பின் இறைவனுக்கு அணிவிப்பதற்காகக் கொடுத்தனுப்பினாள். இதனை ஒருநாள் பெருமாள் அணிந்திருந்த மாலையில் ஒற்றைமுடி இருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்து அதை நீக்கிவிட்டு வேறொரு மாலையைச் சூட்டினர். அந்தப் புதிய மாலையைப் பெருமாள் ஏற்றுக் கொள்ளவில்லை. பெரியாழ்வாரின் கனவில் பெருமாள் தோன்றி, கோதை சூடிக் கொடுத்தனுப்பிய மாலையே எனக்கு விருப்பமானது என்றும், கோதையை மணக்கோலத்தில் திருவரங்கம் அழைத்து வாருங்கள் எனச் சொன்னதால் அவ்வாறே மணக்கோலத்தில் அழைத்துச் சென்றனர். திருவரங்கத்தின் கோயிலில் பெருமாள் ஆட்கொள்ள ஆண்டாள் இறைவனை அடைந்து பெரும் பேறு பெற்றாள்.

கண்ணனுக்குத் துளசி மாலையைச் சூடிக் கொடுத்ததால் 'சூடிக் கொடுத்த சுடர்க்கொடி என்றும், பெருமாள் ஆட்கொண்டதாலும், கவிதைத் திறமையால் தமிழை ஆண்டதாலும் 'ஆண்டாள்' என அறியப்படுகிறார்.

திருவரங்கப் பெருமாளைத் திருமணம் செய்து கொள்வதற்காக மார்கழியில் நோன்பிருந்து பக்தியின் வெளிப்பாடாக திருப்பாவையும், பெண்ணுடைய காதலின் உறுதித் தன்மையைப் பக்தியுடன் கலந்து நாச்சியார் திருமொழியும் பாடினார்.

வானிடை வாழும் அவ் வானவர்க்கு / மறையவர் வேள்வியில் வகுத்த அவி / கானிடைத் திரிவது ஓர் நரி புகுந்து / கடப்பதும் மோப்பதும் செய்வது ஒப்ப / ஊனிடை ஆழி சங்கு உத்தமர்க்கு என்று / உன்னித்து எழுந்த என் தட முலைகள் / மானிடவர்க்கு என்று பேச்சுப்படில் / வாழகில்லேன் கண்டாய் மன்மதனே"[4] {ஆண்டாள், நாச்சியார் திருமொழி, பாசுரம் 5)

என்னும் நாச்சியார் திருமொழியில் இடம்பெற்றுள்ள பாடல் வரிகள் கண்ணன் மீது கொண்ட ஆண்டாளின் காதலையும், அவரது மன உறுதியையும் வெளிப்படுத்துகின்றன.

மத்தளம் கொட்ட வரிச்சங்கம் நின்றூத / முத்துடைத் தாமம் முறைதாழ்ந்த பந்தர்க்கீழ் / மைத்துனன் நம்பி மதுசூதனன் வந்தென் / கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழி நான் "[5] (ஆண்டாள், நாச்சியார் திருமொழி, பாசுரம் 58)

என, கடவுளாகிய கண்ணனுடன் தனது திருமணம் எவ்வாறெல்லாம் நிகழ வேண்டும் என்னும் தனது காதல் கனவை மனம் உருகிப் பாடியுள்ளார்.

## பக்தி இலக்கிய நெறியில் காரைக்காலம்மையாரும் ஆண்டாளும்

தமிழ் இலக்கியப் பரப்பில் ஆண்புலவர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது பெண்பாற்புலவர்களின் எண்ணிக்கை அளவில் மிகச் சொற்பமாகவே இருக்கின்றன. அதிலும் பக்தி இலக்கியத்தின் பெண்களைப் பற்றிய பதிவுகள் வெகு குறைவு. இத்தகைய சூழலில் ஆண்களுக்கு

நிகராகத் தமது படைப்பாற்றல் மூலம் தமிழ் பக்தி இலக்கிய வரலாற்றில் தனி முத்திரை பதித்தவர்களாக காரைக்காலம்மையார் மற்றும் ஆண்டாள் ஆகிய இருவரையும் குறிப்பிடலாம்.

இருபதான் நூற்றாண்டில் பெண்ணியச் சிந்தனை இந்தியச் சூழலில், தமிழ்ச்சூழலில் பரவலாகப் பேசப்பட்டது. தந்தைவழிச் சமூகத்தில் பெண்ணின் உணர்வுகளும் உரிமைகளும் ஒடுக்கப்படுவதற்கு எதிரான குரல்கள் எழுந்தன. பெண் விடுதலை பெற வேண்டுமாயின் பெண்கள் சுயமரியாதை உடையவர்களாகவும், சுயத் தேர்வு கொண்டவர்களாகவும் இருக்க வேண்டுமென கூறப்பட்டது. பாரதியார், பெரியார், அம்பேத்கர், அயோத்திதாசர் போன்றோரின் படைப்புகளும் சிந்தனைகளும் பெருமளவில் பண்பாட்டு மாற்றங்களுக்கும் பெண்களின் சுதந்திர வேட்கைக்கும் வித்திட்டன எனலாம்.

ஆனால், இருபதாம் நூற்றாண்டு பெண்ணியச் சிந்தனைகள் ஏதுமில்லாத ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த காரைக்காலம்மையாரும் ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆண்டாளும் அவர்கள் வாழ்ந்த காலகட்டத்தில் புதுமைகளை நிகழ்த்திக் காட்டிய ஆளுமையாக இருந்துள்ளனர். குடும்ப அமைப்புக்குள் தனக்கு விதிக்கப்பட்ட வாழ்க்கையை அப்படியே ஏற்றுக் கொண்டு வாழ வேண்டும் கற்பிக்கப்பட்ட காலகட்டத்தில் எழுத்தின் மூலம் செய்யுள்களை இயற்றும் திறமை பெற்ற படைப்பாளிகளாக இருந்துள்ளனர் என்பது வியப்புக்குரியது. சுயமாகச் சிந்திக்க உரிமை மறுக்கப்பட்ட காலகட்டத்தில் தனது உள்ளத்து உணர்வுகளைப் பாடல்களாக எழுதிப் பதிவு செய்தது பெரும் புரட்சி என்றே பார்க்க வேண்டியுள்ளது.

காரைக்காலம்மையாரைப் பொறுத்தவரை, கணவன் பிரிந்து சென்று வேறொரு வாழ்க்கைக்குள் தன்னைத் தகவமைத்துக் கொண்டபின், வாழ்க்கை முடிந்துவிட்டது எனச் சோர்ந்து போகாமல், சிறுவயதிலிருந்து வளர்த்துக் கொண்ட திறமையால் இறைவனைப் போற்றிப் பாடி, இறுதியில் இறைவனையே சென்றடைந்தார் என்பது அவர் செய்த பண்பாட்டுப் புரட்சி எனில் மிகையாகாது. பக்தி நெறியில் முக்தி என்பது பெண்களுக்கு மறுக்கப்பட்ட ஒன்றாக இருந்தது. ஆனால், காரைக்காலம்மையாரின் பாடல்கள் பெண்ணும் முக்தி பெற்று இறைவனை அடைய முடியும் எனச் சாதித்துக் காட்டியது. இறைவனால் அம்மையே என்று அழைக்கப்பெற்ற பெருமையை ஈட்டித் தந்தது. இன்றளவும் காரைக்காலம்மையாருக்குத் தனியாகச் சன்னதி அமைக்கப்பெற்று வழிபாடுகளும் நடைபெறுகின்றன. காரைக்காலில் வருடத்திற்கு ஒருமுறை மாங்கனித் திருவிழா தவறாமல் நடைபெறுகின்றது. காரைக்காலம்மையாரின் வரலாற்றை மீண்டும் மீண்டும் மக்களுக்கு நினைவூட்டும் விதமாகவே இத்திருவிழா நடைபெறுகிறது என்பது குறிப்பிடத் தக்கது.

இருபதாம் நூற்றாண்டு நவீனப் பெண்கவிஞர்களுக்கு முன்னோடி என ஆண்டாளைச் சொல்லலாம். ஒருபெண் தானாக வாழ்க்கைத் துணையைத் தேர்வு செய்வதற்கு உரிமை மறுக்கப்பட்டிருந்த காலகட்டத்தில் தனக்கான கணவனை மனதில் வரித்துக் கொண்டு அவனுக்காகவே வாழ்ந்தவர் ஆண்டாள். தன் மனத்தில் வரித்துக் கொண்ட மணாளனுக்காகப் பாடல்களை எழுதினார். கண்ணன் மீது கொண்ட காதலால் வேறு யாரையும் மணம் செய்து கொள்ள மறுத்துப் பேசினார். தனது திருமண விழா குறித்த கவித்துவமான கற்பனைகளைப் பாடல்களில் வெளிப்படையாக எழுதினார். அதேபோல கண்ணன் மீது கொண்ட காதலையும் உன்மத்தமான பெண்ணின் காதல் உணர்வுகளையும் வெளிப்படையாக எழுதியிருப்பது அவரது காலகட்டத்தில் பெரும் பண்பாட்டுப் புரட்சி என்று சொன்னால் அது மிகையாகாது.

"கற்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ / திருப்பவளச் செவ்வாய் தான் தித்திருக்குமோ / மருப்பொசித்த மாதவன் தன் வாய்ச்சுவையும் நாற்றமும் விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல் ஆழி வெண்சங்கே"[6] (ஆண்டாள், நாச்சியார் திருமொழி, பாடல் எண் 64)

என்ற பாடல் கண்ணன் மீது ஆண்டாள் கொண்டிருந்த காதலின் வெளிப்பாட்டைத் தெளிவுபடுத்துகின்றது. கண்ணபெருமானின் வெண்சங்கிற்குக் கிடைத்த பெரும் பேறு தனக்குக் கிடைக்கவில்லையே என்ற ஏக்கமும், கண்ணனின் இதழ் முத்தம் பெறத் தவிக்கும் ஆவலும் மிகவும் வெளிப்படையாகவும் அதேசமயம் கவித்துவமாகவும் பாடியுள்ளார் ஆண்டாள்.

திருமணக் கோலத்தைக் கனவு கண்டு பாடல்கள் எழுதிய ஆண்டாள், கொண்ட கொள்கையில் உறுதியாக இருந்து திருவரங்கப் பெருமானையே கணவனாக அடைந்தாள். ஆண்டாளின் பக்தியும் உறுதியாக காதலும் பாடல்களாக இத்தனை நூற்றாண்டுகள் கடந்து நம்மைப் பேச வைக்கின்றது.

## முடிவுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒவ்வொரு காலகட்டத்திலும் தோன்றிய இலக்கியங்களைப் பார்க்கும்போது எண்ணிக்கையில் குறைவான அளவிலேயே பெண்பாற்புலவர்களின் பாடல்களும் பதிவுகளும் காணக்கிடைக்கின்றன. அந்த வகையில் பக்தி இலக்கியத்தில் மங்கையர்க்கரசியார், இசைஞானியார் போன்ற பெண் நாயன்மார்கள் சிலரது வாழ்க்கை வரலாறு பெரிய புராணத்தில் இடம்பெற்றிருந்தாலும் காரைக்காலம்மையார் மட்டும் தான் தனது வாழ்க்கை வரலாற்றினால் மட்டுமின்றி, தனது படைப்பாற்றலால் தமிழ்ச் சமூகத்தில் நிலைத்து நிற்கிறார். அதேபோல வைணவ பக்தி இலக்கியத்தில் பன்னிரண்டு ஆழ்வார்களுள் ஒரே பெண் ஆழ்வார் என்ற பெருமைக்குரியவர் ஆண்டாள். ஆழ்வார்களுள் பெரும் பெருமைக்குரிய வளர்ப்பு மகள் என்கிற அடையாளத்தோடு நின்றுவிடாமல் தனது படைப்பு முயற்சியினால் இன்றளவும் தமிழ்ப் பெண் படைப்பாளிகளுக்கு முன்னோடிப் படைபாளி என்னும் பெருமையினைப் பெற்றுத் திகழ்கிறார்.

ஆண்டாளும் காரைக்காலம்மையாரும் பக்தி நெறியைத் தனது பாடல்களில் வெளிப்படுத்துவதிலும், கவித்துவச் சிந்தனைகளிலும், மொழியைக் கையாள்வதிலும் தனக்கென தனி அடையாளத்தை உருவாக்கிக் கொண்டனர். பெண்களுக்கு வீடு பேறு இல்லை என்னும் பக்தி நெறியில், இருவருமே அத்தகைய கருத்தாக்கத்தை உடைத்தெறிந்தவர்களாக இருக்கின்றனர். தமது படைப்பாற்றலின் வழி இறைவனை அடையும் பெரும் பேற்றினைப் பெற்றனர். பெண்பாற்புலவர் என்பதையும் தாண்டி, இறைவனை அடையும் நெறியில் புதுமையையும், மன உறுதியையும் கொண்டிருந்தமையே இதற்குக் காரணம் எனலாம். பெண்ணாகப் பிறந்துவிட்டோமே என்னும் தாழ்வுணர்ச்சி இன்றி, பெண் எனும் பெருமித உணர்வுடனேயே இறைவனை நெருங்கிச் சரணடைந்தவர்களாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

## References

எஸ். தோதாத்ரி, (2010) வைணவம் மார்க்சியப் பார்வை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பதிப்பகம், சென்னை.

காரைக்காலம்மையார், (2009) அற்புதத் திருவந்தாதி, சாரதா பதிப்பகம், சென்னை.

சண்முகம்பிள்ளை (2014). தொல்காப்பியம் பொருளதிகாரம், பாரி நிலையம், சென்னை.

தேவி ரா, (2007) தமிழ் இலக்கியத் தகவல் களஞ்சியம், ஸ்ரீநந்தினி பதிப்பகம், சென்னை.

பாக்கியமேரி, (2014) வகைமை நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, பூவேந்தன் பதிப்பகம், சென்னை.

ராதாகிருஷ்ணன் டி.சி., (2018) நாச்சியார் திருமொழி, திருவரசு புத்தக நிலையம், சென்னை. முதல்பதிப்பு

ஜெயந்தி வெ., (2009) பக்தி இலக்கியக் கொள்கை, காரைக்காலம்மையார் ஆய்வேடு, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம்.

ஜெயம், அ (1999) தமிழ் இலக்கிய வரலாறு, - ஜனகா பதிப்பகம், சென்னை.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2024. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License